[1975 மார்ச் 25

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு சௌந்தரபாண்டியன் கேட்ட கேள்விக்கு நேர்மாறான கேள்வி இது. ஊராட்சி மன்றங்கள் வைத்திருப்பவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது நோக்கமல்ல. ஆனால் அவைகளை நிலைப்படுத்த, ஸ்டாண்டர்டைஸ் செய்ய அரசு உத்தேசித்து, இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

Bridge on Korakathur-Valapandal road.

*** 453 *Q.*—Thiru P. ETTIYAPPAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :**

(*a*) whether the scheme for the construction of a road-bridge (தரைப்பாலம்) **between Korakathur and Valapandal on the Cheyyar River is under the consideration of the Government ; and**

(*b*) if so, when the work is expected to be taken up ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த கொரகத்தூர் வாழப்பந்தல் சாலை இன்றைய தினம் பஸ் போக்குவரத்துக்கு வந்தவாசி, செய்யாறு போன்றவற்றையெல்லாம் இணைக்கிற சாலை.

ஆகவே, இப்பொழுது இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது இந்தப் பாலத்தைக் கட்ட அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா? அதோடு செய்யாற்றிலே தண்ணீர் வந்தால் வாழைப்பந்தல் ஊரின் ஓரத்திலே கொஞ்சம் கொஞ்சமாக அரித்து, ஊருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாழைப்பந்தல் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் அமைப்பதையும் தடுப்புச் சுவர் அமைப்பதையும் இரண்டையும் ஒரே கேள்வியிலே கேட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் கேட்டிருக்கிற பாலம் அமைப்பது சம்பந்தமாக பக்கத்தில் ஒரு தாம் போகி, ரூ. 2½ லட்சம் செலவில் கட்டியிருக்கிறோம் இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தாம் போகி மிகவும் முக்கியமானது என்பதை நானே நேரில் போய் பார்த்து அறிந்து கொண்டிருக்கிறேன். அரசாங்கம் நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தடுப்புச் சுவர் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.